ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1929/9 - 2015 අගෝස්තු මස 24 වැනි සඳුදා - 2015.08.24

*1929/9 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*எல். டீ. பி. 94/47* V

**(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

*6 (2) (ஆ) மற்றும் 21 (2) (ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை*

*(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினாலும், 21 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு கொள்கைத் திட்டமிடல், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் -*

*(அ) மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்திற்காக இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படும் காணி இடப்பரப்பு நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாதல் வேண்டும் என்பதுடன் ''பத்தரமுல்லை பட்டபொத்த ஸ்ரீ சுதர்சனாராமை புராண விஹாரை புனித பிரதேசம்'' என அழைக்கப்படுதலும் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன்;*

*(ஆ) ''பத்தரமுல்லை பட்டபொத்த ஸ்ரீ சுதர்சனாராமை புராண விஹாரை புனித பிரதேசம் ''ஆக வெளிப்படுத்தப்பட்ட முழு இடப்பரப்பு தொடர்பிலும் உரு வரைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென பணிக்கின்றேன்.*

*ரணில் விக்ரமசிங்க,*
*கொள்கைத் திட்டமிடல், பொருளாதார அலுவல்கள், சிறுவர்,*
*இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்.*

*கொள்கைத் திட்டமிடல், பொருளாதார அலுவல்கள், சிறுவர்,*
*இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு.*
*கொழும்பு 01,*
*2015, யூலை 17.*

**அட்டவணை**

*பத்தரமுல்லை பட்டபொத்த ஸ்ரீ சுதர்சனாராமை புராண விஹாரை புனித இடப்பரப்பைக் கொண்டுள்ள இடப்பரப்பு*

*மேல் மாகாணத்தில், கொழும்பு நிர்வாக மாவட்டத்தில், கடுவெலை பிரதேச செயலாளர் பிரிவில், தலங்கமை (தெற்கு) கிராமத்தினுள் பட்டபொத்த கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள 2015, தை மாதம் 2 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர் நாயகத்தின் சுவட்டு வரைபட இலக்கம் CO/ KDW/ 2014/ 870 இல் காட்டப்பட்ட 0.7375 ஹெக்டெயார் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ள 01 ஏக்கர், 03 றூட், 11.59 பேர்ச்சஸ் காணி இடப்பரப்புகளும் அதன் எல்லைகளும் பின்வருமாறு :-*

*வடக்கு : பாதை (பிரதேச சபை) ;*

*கிழக்கு : நில்கால் விஜயசிங்க மற்றும் ஏனையவர்களுக்கு சொந்தமான கொறக்கஹவத்தை நிலம் ;*

*தெற்கு : றொபர்ட் குணவர்த்தன வீதி மற்றும் உரிமையாளர் ஈ. பி. சமரகொடி ;*

*மேற்கு : றொபர்ட் குணவர்த்தன வீதி.*

*9- 147*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*